

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2018 APRIL

மலர்: 11 இதழ்: 7 ஏப்ரல் 2018 விலை: ரூ.10



## அறிவியலில் இஸ்லாமியர் பங்களிப்பு



## அறிவியலின் வாசல்களை அகலத் திறந்த ஆன்மீகம்

# சகஜீவிகளோடு கருணை

அனைத்து உயிரினங்களோடும் கருணையோடு நடந்துகொள்வது இறைவிசுவாசியின் பண்பாகும்.

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு மனிதன் பாதையில் நடந்து சென்றபோது கடுமையான தாகம் ஏற்பட்டது. ஒரு கிணற்றைக் கண்டு அதனுள் இறங்கி தண்ணீர் அருந்திவிட்டு வெளியேறினான். அப்போது அங்கு ஒரு நாய் தாகத்தால் நாக்கைத் தொங்கவிட்டபடி ஈர மண்ணை நக்கிக் கொண்டிருந்தது. அம்மனிதன் 'எனக்கு ஏற்பட்ட தாகத்தைப் போன்றே இந்த நாய்க்கும் ஏற்பட்டுவிட்டது' என்று நினைத்தவனாக கிணற்றினுள் இறங்கி தோலாலான தனது காலுறையில் நீரை நிரப்பிக் கொண்டு அதை தனது வாயில் கவ்வியபடி மேலே வந்து நாய்க்குத் தண்ணீர் புகட்டினான். இறைவன் அவனது நற்செயலுக்குப் பகரமாக அவனை மன்னித்து விட்டான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியபோது நபித்தோழர்கள் "விலங்குகளுக்கு உதவும் விஷயத்திலும் எங்களுக்கு நற்கூலி கிடைக்குமா?" என்று வினவினர். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், "உயிருள்ள ஒவ்வொரு பிராணியின் விஷயத்திலும் நற்கூலி உண்டு."






(நூல்: புகாரி, முஸ்லிம்)

● நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ஒரு பூனையின் விஷயத்தில் ஒரு பெண் வேதனையளிக்கப்பட்டாள். காரணம் அவள் அதை அடைத்து வைத்துவிட்டாள். அது பசியால் செத்துவிட்டது. அதன் காரணமாக அவள் நரகத்தில் நுழைந்தாள். அப்போது (வானவர்கள்) கூறினார்கள், "நீ அதற்கு உணவளிக்காமல், தண்ணீர் புகட்டாமல் அதை அடைத்துவிட்டாய். அதை நீ வெளியே விட்டிருந்தால் பூமியிலுள்ள பூச்சிகளை சாப்பிட்டிருக்கும்." (புகாரி, முஸ்லிம்)

● நபி (ஸல்) அவர்கள் ஓர் இடத்தில் தங்கியபோது ஒரு பறவை நபி (ஸல்) அவர்களின் தலையின்மேல் பறந்து கொண்டிருந்தது. ஒருவர் தனது முட்டையை எடுத்து அநீதமிழைத்தது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டது போன்று இருந்தது. நபி (ஸல்) அவர்கள் "உங்களில் இந்தப் பறவையின் முட்டையை எடுத்தவர் யார்?" என்று கேட்டார்கள். அப்போது ஒரு மனிதர் "அல்லாஹ்வின் தூதரே! நான் அந்த முட்டையை எடுத்தேன்" என்றார். நபி (ஸல்) அவர்கள் "அதன் மீது கருணைகூர்ந்து அதை திருப்பிக் கொடுத்துவிடு" என்றார்கள்.



(மு:ஜமுத் தப்ரானி)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 11 இதழ்: 7 ஏப்ரல் 2018 விலை: ரூ.10

## பொருளடக்கம்

ஈடு செய்யமுடியாத பேரிழப்பு? -2
வெற்றிபெற்ற மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை... அங்கு! -6
வட்டி ஒரு வன்கொடுமை -8
அறிவியலின் வாசல்களை அகலத் திறந்த ஆன்மீகம் -9
அறிவியல் எழுச்சியில் இஸ்லாத்தின் பங்கு -12
வாசகர் எண்ணம்-15
அறிவியலில் இஸ்லாமியர்களின் பல்துறைப் பங்களிப்பு -16
யாசகம் தவிர்!-21
இஸ்லாமியரின் அறிவியல் வீழ்ச்சிக்கான காரணங்கள்- 22
கருணை காட்டுதல் என்ற சமூகக் கடமை -24

**வாசகர்கள் கவனத்திற்கு..**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஈராண்டு சந்தா **Rs.240-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**


PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# ஈடு செய்யமுடியாத பேரிழப்பு?

## ஸ்டீபன் ஹாக்கிங் மறைவு

உலகின் தலைசிறந்த இயற்பியல் விஞ்ஞானிகளில் ஒருவரான பிரிட்டனைச் சேர்ந்த ஸ்டீபன் ஹாக்கிங் உடல் நலக்குறைவால் கேம்பிரிட்ஜ்ஜில் உள்ள அவரது இல்லத்தில் 14 மார்ச்சு 2018 அன்று காலமானார். அவருக்கு வயது 76. 1960-களில் ஸ்டீபன் ஹாக்கிங் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தபோது motor neurone என்ற நரம்பியல் நோயால் பாதிக்கப்பட்டார், இதனால் அவரது உடல் உறுப்புகள் செயலிழக்கத் தொடங்கின. ஒரு கட்டத்தில் பெரும்பாலான உறுப்புகள் செயலிழந்துவிட்ட நிலையில், ஈக்வலைஸர் என்ற கம்ப்யூட்டர் புரோகிராம் உதவியுடன் கன்னத் தசைகளின் அசைவுடன் கம்ப்யூட்டர் குரலில் பேசத் தொடங்கினார் ஹாக்கின்ஸ். சக்கர நாற்காலியில் அமர்ந்து கொண்டே அண்டம் தொடர்பான ஆராய்ச்சியில் பல மைல்கல் சாதனைகளை புரிந்தவர் ஸ்டீபன் ஹாக்கிங்.



இவர் தான் உருவாக்கிய கோட்பாடுகளைப் பற்றியும், அண்டவியல் தொடர்பிலும் பிரபலமான அறிவியல் கட்டுரைகளை எழுதிப் புகழ் பெற்றார். இவரது ‘காலத்தின் ஒரு வரலாற்றுச் சுருக்கம்’ (A brief history of time) என்ற புகழ்பெற்ற கட்டுரைத் தொடர் இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் சண்டே டைம்ஸ் இதழில் 237 வாரங்களாக வெளிவந்து சாதனை புரிந்தது. சாதாரண மக்களும் வாசித்துப் பயனடையும் வகையில் இலகுவான மொழியில், அறிவியற் சமன்பாடுகளைத் தவிர்த்து எழுதப்பட்ட இவரது அறிவியல் நூல்கள் பலரையும் கவர்ந்தன.

## மரணம் பற்றிய ஹாக்கிங்கின் கண்ணோட்டம்

ஹாக்கிங் அவர்களைப் பற்றி ஜெர்மனியில் பணிபுரியும் இலங்கைத் தமிழ் இயற்பியலாளர் ராஜ் சிவா அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

ஹாக்கிங்கின் இறப்புக்காக அஞ்சலி செலுத்துவது எந்தளவில் ஏற்புடையது என்று தெரியவில்லை. காரணம் அவரைப் போன்ற குவாண்டம் கோட்பாட்டு இயற்பியலாளர்கள், இறப்பு என்பதை எப்படி வரையறை செய்து வைத்திருக்கிறார்கள். அதில் எந்தளவுக்கு உண்மை மற்றும் சாத்தியம் உள்ளது என்பது பலருக்குப் புரியாத விஷயம்.

எந்தப் பொருளானாலும் அது கட்டமைக்கப்பட்ட துகள்களை அழிப்பது என்பது சாத்தியமே இல்லை என்கிறது இயற்பியல். ஒரு பொருளின் அல்லது உயிரின் கட்டமைப்பிற்கான துகள்களை அழிக்கவே முடியாது. அத்துடன் அதன் சக்தியும் அழிந்து போகாது. இவை வேறு வடிவத்தில் உருவாக்கம் அடையலாமேயொழிய அழிக்க முடியாதவை. ஸ்டீபன் ஹாக்கிங் போன்ற உச்ச இயற்பியலாளர்கள், ஒரு உயிரின் அல்லது பொருளின் கட்டமைப்புக்கான இன்ஃபார்மேஷன்கள் கூட அழிக்க

முடியாதவை என்று நம்புபவர்கள். அந்த இன்ஃபார்மேஷன்கள் பிரபஞ்சத்திலுள்ள கருந்துளைகளின் சுவர்களில் பதிவுசெய்யப்பட்டு வருபவை என்றும் நிரூபிப்பவர்கள். ஸ்டீபன் ஹாக்கிங், லெனார்ட் சஸ்கிண்ட் ஆகியோரின் வாதங்களைப் படித்தவர்கள் இதைப் புரிந்து கொள்ளலாம்.

அதனால் ஸ்டீபன் ஹாக்கிங் என்ற ஒருவர், காற்றில் ஒரு மெழுகுவர்த்தியின் புகைபோல கலைக்கப்பட்டுவிட்டார் என்று மட்டுமே சொல்ல முடியும். முற்றாக இல்லாமல் போய்விட்டார் என்று கருத்து அவரிடமே இருந்திருக்காது. அவரிடம் மட்டுமில்லை. என்னிடமும் இதுபோன்றதொரு கோட்பாட்டு நிலைப்பாடே உண்டு. இறந்த பின்னரும் நாம் ஏதோவொரு வடிவத்தில் உயிர் வாழ்ந்துகொண்டிருப்போம் என்று இயற்பியல் ரீதியாக நம்புபவன் நான்.

-ராஜ் சிவா

## ஹாக்கிங்கின் தாக்கம்

இவ்வுலகுக்கு ஹாக்கிங்கின் வருகை பற்பல நன்மைகளை வழங்கியுள்ளது என்பதும் ஒரு மாற்றுத் திறனாளியாக நின்று அவர் ஆற்றிய சாதனை பலருக்கும் தன்னம்பிக்கையை வளர்க்கக் கூடியதாக அமைந்தது என்பதும் அரும்பெரும் ஆராய்ச்சிகளுக்குப் பின் அவர் கண்டறிந்து உலகுக்கு அறிவித்த செய்திகள் அறிவியல் முன்னேற்றத்திற்கு மைல்கல்களாக அமைந்ததும் அனைவரும் அறிந்த உண்மைகளே. கடவுள் மற்றும் மறுமை பற்றிய அவரது சில கூற்றுக்கள் பலரை நாத்திகத்திற்கு கொண்டு சென்றன என்பதும் உண்மையே. ஒரு தலைசிறந்த அறிவியலாளர் சொல்லியிருக்கும் போது அது உண்மையாகாமல் இருக்குமா என்ற எண்ணம் பலரையும் தடுமாற்றத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது.

## அறிவியலில் எல்லைகள்

அறிவியல் என்றால் என்ன, அதன் எல்லைகள் எதுவரை என்பதை அறிய முற்படாமையே மேற்படி தடுமாற்றத்திற்குக் காரணமாகிறது.

அறிவியல் என்றால் என்ன என்ற அடிப்படைக் கேள்விக்குப் பலரும் பல்வேறுவிதமான விடைகளைத் தரக்கூடும். பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படும் விடை, “நம்மைச் சுற்றியுள்ள அனைத்தையும் புரிந்துகொள்ளவும், உலகமும் இயற்கையும் எப்படி இயங்குகின்றன என்பதைத் தெரிந்துகொள்ளவும் மனிதர்கள் மேற்கொள்ளும் ஒரு தொடர்ச்சியான, ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சியே அறிவியல்” என்பதுதான்.

அதாவது அற்ப ஆயுள் கொண்ட ஆறடி மனிதனின் புலன்களுக்கு நேரடியாகவும் கருவிகள் மூலமாகவும் வந்தடையும் தகவல்களை (sensible data) அடிப்படையாக்கொண்டு உருவாவதே அறிவியல். இம்மாபெரும் பிரபஞ்சத்தில் தற்காலிகமாக மின்னி மறையும் ஒரு மிகமிக நுண்ணிய துகள் போன்ற ஒரு ஜீவி அதற்கு மட்டும் விசேஷமாகக் கொடுக்கப்பட்டுள்ள பகுத்தறிவு என்ற ஆற்றலைக் கொண்டு இப்பிரபஞ்சத்தில் புதைந்து கிடக்கும் இரகசியங்களை துருவித்துருவி

ஆராய்ந்தறியும் முயற்சியே அறிவியல் என்றும் கூறலாம்.

இந்த சிறு முயற்சியில் மனித அறிவுக்கு எட்டிய அறிவு என்பது இன்னும் எட்டாத அறிவோடு ஒப்பிடுகையில் கடலில் ஒரு துளி போன்றதே. ஆனால் அதுவே அனைத்துக்கும் இறுதியானது (ultimate) என்று இறுமாந்திருப்பது அறிவின்மை அல்லவா? அறிவியல் ஆராய்ச்சிகளின் அடிப்படையே 'அறிந்தது கைமண் அளவு அறியாதது உலகளவு' என்ற உண்மைதான். அனைத்தையும் அறிந்துவிட்டோம் மேற்கொண்டு அறிவதற்கு எதுவும் இல்லை என்ற நிலை வந்துவிட்டால் அறிவியல் ஆராய்ச்சிகள் அர்த்தமற்றவை. நாம் வாழும் பேரண்டத்தைப் பொறுத்த ஆராய்ச்சிகளிலும் சரி அணுகூறுகளுக்கு உள்ளே நிகழும் ஆராய்ச்சிகளிலும் சரி வெளி எல்லையும் உள் எல்லையும் இன்னும் கண்டறியப்படாதவை என்பதை அறிவோம். கண்டறியப்படாதவை என்பதை விட அருகே கூட அறவே நெருங்க முடியாதவை என்பதே உண்மை. ஏனெனில் நமது அறிவாற்றல் என்பதும் மிகமிக அற்பமான ஒன்றே. மனிதனுக்கு இறைவன் வழங்கிய ஏனைய ஆற்றல்களைப் போல அறிவாற்றலும் இறைவனால் வரையறுக்கப்பட்ட ஒன்றே.

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் காலத்தில் யூதர்கள் சிலர் ரூஹ் (உயிர்) என்பது என்ன? என்ற கேள்வியை எழுப்பினார்கள் அப்போது இறைவனிடம் இருந்து கீழ்கண்ட வசனம் *அருளப்பட்டது:*

- **நபியே!) ரூஹைப் பற்றி (யூதர்களாகிய) அவர்கள் உங்களிடம் கேட்கிறார்கள். அதற்கு நீங்கள் ''அது எனது இறைவனின் கட்டளையால் ஏற்பட்டது. (அதைப் பற்றி) வெகு சொற்ப ஞானமேயன்றி உங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. (ஆதலால், அதன் நுட்பங்களை நீங்கள் அறிந்துகொள்ள முடியாது)'' என்று கூறுங்கள். (திருக்குர்ஆன் 17:85)**

*நூல்: புகாரி 125*

எவ்வளவுதான் உலகம் போற்றும் அறிவியல் மேதையாயினும் ஒருவர் அற்பமான அறிவை தற்காலிகமாக தாங்கி நின்று மறைந்து போகும் மனித இனத்தைச் சார்ந்தவர் என்பதால் அவரது அறிவியல் சார்ந்த கருத்தேயானாலும் அது இறுதியானது அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள கடமைப்பட்டுள்ளோம். காரணம் இங்கு மேலே குறிப்பிட்டவாறு ஆராய்ச்சி எல்லைகள் வரையறுக்கப் படாதவையாக இருக்கின்றன. அவ்வாறிருக்கும்போது அறிவியலுக்கு அப்பாற்பட்ட கருத்துக்களை எப்படி இறுதியானவை என்று கொள்ள முடியும்?

## அறிவியலையே முடக்கும் நிலைப்பாடு

புலன்களால் அல்லது கருவிகளால் அறியமுடியாத அல்லது அறியாத எதையும் அப்பட்டமாக 'இல்லை' என்று மறுப்பது அறிவியல் ஆராய்ச்சிகளை முடக்கிப்போடும் செயலாகும். மாறாக 'தெரியாது' என்ற நிலைப்பாட்டைத் தொடர்ந்து 'அது இருக்கக்கூடும்' அல்லது ' அதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன' என்ற நிலைபாட்டை மேற்கொள்வதால்தான் அறிவியல் முன்னேற்றமே சாத்தியமாகிறது. உதாரணமாக அணு என்பதுதான் உடைக்கமுடியாத மிகச்சிறிய பதார்த்தம் என்ற

நிலைப்பாட்டுக்கு ஒரு காலத்தில் வந்தது. அப்போது அதுவே இறுதியானது என்று முடிவெடுத்திருந்தால் அதற்குப்பின் நடந்த எவ்வளவு அறிவியல் முன்னேற்றங்களை அது முடக்கிப்போட்டு இருக்கும் என்பதை நீங்கள் ஊகிக்க முடியும்.

உதாரணமாக அண்டவியலில் பிரபஞ்ச விரிவாக்கத்தின் பின்னணியில் காலக்சிகளுக்கு இடையே அவற்றைப் பிணைத்து வைத்திருக்கும் சக்தியும் அபாரமான வேக வளர்ச்சியோடு விரிவாக்கத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கும் சக்தியும் என்னவென்றே அறியப்படாதவை. அந்தக் காரணத்துக்காக அவற்றை இல்லையென்று மறுக்காமல் அவற்றை கரும்பொருள் மற்றும் கருஞ்சக்தி (dark matter, dark energy) என்று பெயரிட்டு அவற்றின் இருப்பை ஏற்பதைத்தான் அறிவியல் அணுகுமுறையிலும் காண்கிறோம். ஆனால் தன் ஆய்வு எல்லைக்கே தட்டுப்படாதவற்றை இல்லை என்று அப்பட்டமாக மறுத்தால் அது அறிவீனமும் அராஜகமும் அல்லாமல் வேறு என்ன? அந்த அராஜகத்தின் விளைவாக சமூகத்தில் உருவாகும் தான்தோன்றித்தனத்திற்கும் குழப்பங்களுக்கும் ஒழுக்க சீர்கேடுகளுக்கும் இறைவனிடம் தண்டனைகள் காத்திருக்கின்றன.

● **அப்படியல்ல, அவர்கள் அறிவால் அறிந்து கொள்ள இயலாததை அதன் விளக்கம் அவர்களுக்கு எட்டாத நிலையில் பொய்யெனக் கூறுகிறார்கள் இவர்களுக்கு முன் இருந்தவர்களும் இவ்வாறே (தாங்கள் அறிந்து கொள்ள முடியாதவற்றை) பொய்ப்பித்தார்கள். ஆகவே அந்த அநியாயக்காரர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதை (நபியே!) நீர் நோக்குவீராக. (திருக்குர்ஆன் 10:39)**

## ஆன்மீகத்தோடுள்ள அணுகுமுறை

காலம் செல்லச்செல்ல இவ்வுலகில் காணும் படைப்பினங்களைப் பற்றிய அறியாமையை அகற்றும் வேலையை தனது அயராத ஆராய்ச்சிகள் மூலம் அறிவியல் செய்துவருகிறது. ஆனால் மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் அதுவே தீர்வு வழங்கும் என்று நம்பியிருப்பது பெரும் ஏமாற்றத்தையும் இழப்பையுமே கொண்டுவரும். உதாரணமாக மனிதவாழ்வின் நோக்கம், மனிதன் இங்கு வந்ததன் பின்னணி, மனித வாழ்வில் சரி எது தவறு எது, நியாயம் எது அநியாயம் எது என்பதற்கான அளவுகோல் போன்ற பலவற்றையும் அறிவியல் நமக்கு சொல்லித்தராது. அறிவியல் சொல்லட்டும் பிறகு பார்க்கலாம் என்று காத்திருந்தால் பல முக்கியமான விடயங்களை நாம் இழக்கவேண்டி வரும். அது இழப்பு என்பதை விட கடுமையான விபரீதங்களையும் சந்திக்க நேரிடலாம். அறிவியல் கூறுவதுதான் இறுதி (ultimate) என்று எடுத்துக் கொண்டு அதற்கு அப்பாற்பட்டவற்றை அப்பட்டமாக மறுத்தால் ஆன்மிகம் கூறும் மறுமை வாழ்வில் நரகத்தையும் ஒருவர் அடைய நேரிடலாம். அதுவும் நிரந்தர வாழ்விடம்!

● **(நபியே!) எவன் நம்முடைய அறிவுரையைப் புறக்கணிக்கின்றானோ, மேலும், உலக வாழ்க்கையைத் தவிர வேறெந்த குறிக்கோளும் அவனுக்கு இல்லையோ அவனை அவனது நிலையிலேயே விட்டுவிடும். இவர்களின் அறிவின் எல்லை அவ்வளவுதான்! அவனுடைய பாதையை விட்டுப் பிறழ்ந்தவர் யார் நேரான வழியில் இருப்பவர் யார் என்பதனை**

# வெற்றிபெற்ற மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை... அங்கு!

## புகழ்பெற வேண்டி உழைத்தவர்கள்

● அரபு மண்ணில் இஸ்லாத்தின் வருகைக்கு முன்னர் ஹாத்திம் தாயி என்பவர் அரபியரிடத்தில் மிகுந்த மரியாதைக்குரியவராக திகழ்ந்தார். அவரது தாராள குணம் அரேபியர்களிடத்தில் முன்மாதிரியான ஒன்றாக அறியப்பட்டிருந்தது. அவர் ஏழைகளுக்கு உணவளித்தார், வழிபோக்கர்களுக்கு தங்குமிடம் தந்தார். எதிரிகளிடத்திலும் கருணையோடு நடந்தார். பிற்காலத்தில் அவரது மகன் அதி இப்னு ஹாத்திம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். நபிகளாரின் மிகச்சிறந்த தோழர்களில் ஒருவரானார். ஒருநாள் தனது தந்தையைப் பற்றி நபிகளாரிடம் வினவினார் அவர். "இறைவனின் தூதரே, எனது தந்தை உறவினர்களோடு நல்லமுறையில் நடந்துகொண்டார். ஏழைகளுக்கு உணவளித்து வந்தார். அவர் இதைச் செய்து வந்தார், அதைச் செய்து வந்தார்.. என்று அவர் செய்துவந்த நன்மைகளைப் பட்டியலிட்டுக் கூறிக்கொண்டே வந்தார். பிறகு கேட்டார், அவர் செய்தவற்றுக்கு இறைவனிடம் கூலி ஏதும் கிடைக்குமா?" நபிகளார் பதிலளித்தார்கள், "அதியே, உன் தந்தை ஒன்றை (அதாவது புகழை) அடைய விரும்பினார். அதை அவர் அடைந்தும் விட்டார்." (முஸ்னத் அஹமது)

புகழ்பெற்ற மனிதர்கள் மண்ணிலிருந்து மறையும் போதெல்லாம் இறுதியில் நடப்பது இதுவே.

அறிவியலில், திரையுலகில், அரசியலில், செல்வசெழிப்பில், கல்வியில், விளையாட்டில், தொழிற்துறையில், வியாபாரத்தில், சமூகசேவையில்... என மனித வாழ்வின் பல்வேறு துறைகளில் இமாலய வெற்றிகளை ஈட்டியவர்களை நாம் கண்டு வருகிறோம். அதேநேரத்தில் ஒரு துறையில் மிகச்சிறந்த அறிவாளிகள் அல்லது ஆற்றல் மிக்கவர்கள் வேறுதுறைகளில் அறிவீனர்களாகவோ அல்லது பலவீனர்களாகவோ இருப்பது கூடும். எனினும் ஒருவருடய அறிவும் ஆற்றலும் அவருக்கு ஆன்மீக ரீதியான பயன் தராவிட்டால் அது ஈடில்லாத பேரிழப்பே! அவர்கள் இவ்வுலகில் நிகழ்த்திய சாதனைகள், வென்ற விருதுகள், பட்டங்கள், குவித்த செல்வங்கள், புகழ்மாலைகள், நினைவுச்சின்னங்கள் போன்றவை இவ்வுலகைப் படைத்தவனின் பால் எந்த அளவுக்கு மதிப்புக்குரியவை என்பதுதான் இறுதி வெற்றியின் அளவீடு ஆகும்.

இக்கூறப்பட்ட எதுவும் இவ்வுலக வாழ்க்கை என்ற பரீட்சையை நாம் முடித்துக்கொண்டு இறைவன்பால் திரும்பும்போது கூடவராது என்பது ஒவ்வொருவரும் அறிந்ததே. இவ்வுலகில் சாதனைகள் புரிவதற்கு அஸ்திவாரமாக இருந்த நம் உடலையும் புலன்களையும் அறிவையும் ஆற்றல்களையும் வழங்கியவனைப் பற்றி அறியாதிருப்பதும் ஆராயாதிருப்பதும் பகுத்தறிவுக்கு இழுக்கே. அவனை மறுப்பது என்பது நம்மைப் படைத்து பரிபாலிப்பதோடு மட்டுமல்லாமல் அவன் வழங்கும் அருட்கொடைகளுக்கு செய்யப்படும் நன்றிகேடே! மேலும் அந்த இறைவன் தனது செய்திகளை வேதங்கள் மற்றும் தூதர்கள் மூலமாக

அனுப்பும்போது அவற்றை அலட்சியம் செய்வதும் புறக்கணிப்பதும் இறைவனிடம் தண்டனைக்குரிய செயல்களே. இதோ இறைவனின் இறுதிவேதம் இவ்வாறு கூறுகிறது:

- **"(தம்) செயல்களில் மிகப் பெரும் நஷ்டவாளிகள் யார் என்பதை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என்று (நபியே!) நீர் கேட்பீராக. யாருடைய முயற்சி இவ்வுலக வாழ்வில் பயனற்றுப் போயிருக்க தாங்கள் மெய்யாகவே அழகான காரியங்களையே செய்வதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள்தான். அவர்கள் தங்களுடைய இறைவனின் வசனங்களையும், அவனை (மறுமையில்) சந்திப்போம் என்பதையும் நிராகரிக்கிறார்கள் அவர்களுடைய செயல்கள் யாவும் வீணாகும் மறுமை நாளில் அவர்களுக்காக எந்த மதிப்பையும் நாம் ஏற்படுத்த மாட்டோம். அதுவே அவர்களுடைய கூலியாகும் - (அது தான்) நரகம் - ஏனென்றால் அவர்கள் (உண்மையை) நிராகரித்தார்கள் என்னுடைய வசனங்களையும், என் தூதர்களையும் ஏளனமாகவே எடுத்துக் கொண்டார்கள். (திருக்குர்ஆன் 18:103- 106)**

## புகழ் பெற்ற பிரபலங்களின் நிலை

இன்றைய உலகில் அதிகாரம், செல்வம், அறிவாற்றல், செல்வாக்கு, புகழ் என்பவை யாரிடம் உள்ளதோ அவர்கள் எதைப் பரிந்துரைக்கிறார்களோ அவையே உண்மைகளாக- நியாயமானதாக - நேர்மைக்கான அளவுகோலாக சமூகத்தால் மதிக்கப்படுகின்றன. உதாரணமாக...

- எண்ணெய் வள நாடுகளை சதா போர்முனையில் நிறுத்தி ஆயுத விற்பனை மூலம் கொள்ளையடிக்கும் வல்லரசு நாடுகளின் அதிபர்கள் சமாதானப் பிரியர்களாக உலாவருகிறார்கள். தங்களின் சக்திவாய்ந்த ஊடகங்கள் மூலம் அவர்களுக்கு எதிராகப் போராடும் சுதந்திரப்போராட்ட வீரர்களை பயங்கர வாதிகளாக சித்தரிக்கிறார்கள். உலகம் அவற்றை அப்படியே நம்புகிறது.

- சினிமா மூலம் விபச்சாரக் கலாச்சாரத்தை மக்களிடையே பரப்பும் நடிகர்களும் நடிகைகளும் விளம்பரங்களில் தோன்றி நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு பரிந்துரை செய்கிறார்கள். மக்கள் அவற்றை அப்படியே நம்பி வாங்குகிறார்கள்.

இன்னும் இவைபோன்ற பல விடயங்களையும் நாம் கண்டு வருகிறோம். பெரும்பான்மை மக்களால் வாய்மையானவர்களாகப் போற்றப்படும் இவர்கள் இறைவனின் பார்வையிலும் அவ்வாறே மதிக்கப்படுவார்களா?

- ஒரு (பணக்கார) மனிதர் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அருகில் சென்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள் (தம் தோழர்களிடம்), 'இவரைப்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?' என்று கேட்டார்கள். தோழர்கள், 'இவர் பெண் கேட்டால் இவருக்கு மணமுடித்து வைக்கவும், இவர் பரிந்துரைத்தால் அதனை ஏற்கவும், இவர் பேசினால் செவிசாய்க்கப்படவும் தகுதியான மனிதர்" என்று கூறினர். பிறகு நபி (ஸல்) அவர்கள் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்கள். பிறகு, நபி (ஸல்) அவர்கள் அருகில் முஸ்லிம்களில் ஓர் ஏழை மனிதர் சென்றார். அப்போது

நபி (ஸல்) அவர்கள், 'இவரைக் குறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?' என்று கேட்டார்கள். தோழர்கள், 'இவர் பெண் கேட்டால் இவருக்கு மணமுடித்து வைக்காமலும், இவர் பரிந்துரைத்தால் அது ஏற்கப்படாமலும், இவர் பேசினால் செவிதாழ்த்தப்படாமலும் இருக்கத் தகுதியானவர்" என்று கூறினர். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள், 'அவரைப் போன்ற (வசதி படைத்த) வர்கள் இந்தப் பூமி நிரம்ப இருந்தாலும் (அவர்கள் அனைவரையும் விட) இந்த ஏழையே மேலானவர்' எனக் கூறினார்கள்.

அறிவிப்பளர் :ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி) (நூல்: புகாரி)

**அறிவாற்றல் வழங்கப்பட்டவர்களின் நிலை**

அறிவாற்றல் என்பது மனிதனுக்கு இறைவனால் வழங்கப்படும் பார்வை மற்றும் கேள்வி போன்ற ஒரு ஆற்றலே. ஒருவருக்கு அருமையான கண் பார்வை இருந்தும் தனக்கு சுற்றுமுற்றும் பார்ப்பதற்கு பயன்படுத்தாமல் இருந்தால் அப்பார்வைப் புலனால் என்ன பயன்? அதேபோலவே அறிவாற்றல் பெற்ற ஒருவர் அதை வழங்கிய இறைவனை பகுத்தறிய பயன்படுத்தாவிட்டால் அதனால் என்னதான் பயன்?

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் ( குறள் எண் : 2 )

பொருள் : தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

# வட்டி ஒரு வன்கொடுமை

**● யார் வட்டி(வாங்கித்) தின்றார்களோ, அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போலல்லாமல் (வேறுவிதமாய்) எழமாட்டார்கள் இதற்குக் காரணம் அவர்கள், "நிச்சயமாக வியாபாரம் வட்டியைத் போன்றதே" என்று கூறியதினாலேயாம் அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி, வட்டியை ஹராமாக்கியிருக்கிறான் ஆயினும் யார் தன் இறைவனிடமிருந்து நற்போதனை வந்த பின் அதை விட்டும் விலகிவிடுகிறானோ, அவனுக்கு முன்னர் வாங்கியது உரித்தானது என்றாலும் அவனுடைய விவகாரம் அல்லாஹ்விடம் இருக்கிறது. ஆனால் யார் (நற்போதனை பெற்ற பின்னர் இப்பாவத்தின்பால்) திரும்புகிறார்களோ அவர்கள் நரகவாசிகள் ஆவார்கள் அவர்கள் அதில் என்றென்றும் தங்கிவிடுவார்கள். (திருக்குர்ஆன் 2:275)**

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : இறைவன் நான்கு பேர்களை சுவர்க்கத்திற்கோ அல்லது அதனுடைய சுகத்தை அனுபவிப்பதற்கோ விட மாட்டான். அவர்கள்: 1. குடிப்பதை வழமையாகக் கொண்டவர்கள். 2. வட்டி வாங்கித் தின்றவர்கள். 3. அநாதைகளின் சொத்தை அநியாயமாக அபகரித்தவர்கள். 4. பெற்றோரைத் துன்புறுத்தியவர்கள். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரழி) ஆதாரம்: ஹாக்கிம்)

# அறிவியலின் வாசல்களை அகலத் திறந்த ஆன்மீகம்

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் எளிய வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த பாலைவனமக்களிடம் எபபடிப்பட்ட சிந்தனை இருந்திருக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் கவலையெல்லாம் உணவைப் பற்றியும் அதை சம்பாதிப்பதைப் பற்றியும் மட்டுமே இருந்திருக்கும்! ஆனால் அங்குதான் இன்றைய அறிவியல் புரட்சிக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்த விஞ்ஞானிகள் உருவானார்கள். ஐரோப்பா அன்று இருண்ட காலத்தில் வாழ்ந்தபோது அரபுமண்ணில் இருந்துதான் அறிவியலின் அடிப்படைகள் உருவாகி வளர்ந்தன. பிற்காலங்களில் சிலுவை யுத்தங்களுக்குப் பிறகு அவை ஐரோப்பியர்களால் கைப்பற்றப் பட்டு அவர்கள்தான் அறிவியலின் முன்னோடிகள் என்ற மாயை ஏற்படுத்தப்பட்டது. தொடர்ந்த காலனி ஆதிக்க சக்திகளும் இந்த உண்மைகளை மறைத்து வைப்பதில் பெரும் பங்காற்றின. ஆயினும் சில மறைக்கப்படாத விடயங்கள் தலைகாட்டவே செய்கின்றன. உதாரணமாக அல்ஜிப்ரா, ஆல்கஹால், அல்கெமியா போன்ற அறிவியல் பதங்கள் அரபு முஸ்லிம்களிடம் இருந்து அறிவியல் அடிப்படைகள் உருவாகின என்பதற்கு சாட்சி பகர்ந்து கொண்டு இருக்கின்றன.

**பகுத்தறிவு கொண்டு அறிவாய் படைத்தவனை!**

இந்த சிந்தனைப் புரட்சி அந்தப் பாலைவன மணலில் துளிர்விடக்



காரணமாக அமைந்தவை அன்று திருக்குர்ஆன் தூவிய விதைகளே! அந்தப் பாலைவன வாசிகளைத் திருக்குர்ஆன் வானத்தையும், பூமியையும் மலைகளையும் விலங்கினங்களையும் பற்றி சிந்திக்கத் தூண்டியது. பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் அந்த மண்ணில் இறங்கிய இறைவசனங்களில் சிலவற்றைப் பாருங்கள்:

- **(நபியே!) ஒட்டகத்தை அவர்கள் கவனிக்க வேண்டாமா? அது எவ்வாறு படைக்கப்பட்டிருக்கிறது என்று- மேலும் வானத்தை அது எவ்வாறு உயர்த்தப்பட்டிருக்கிறது? என்றும், இன்னும் மலைகளையும் அவை எப்படி நாட்டப்பட்டிருக்கின்றன? என்றும், இன்னும் பூமி அது எப்படி விரிக்கப்பட்டிருக்கிறது? (என்றும் அவர்கள் கவனிக்க வேண்டாமா?) (திருக்குர்ஆன் 88:17-20)**

- **நிச்சயமாக, வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும் இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு திடமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன. (திருக்குர்ஆன் 3:190)**

நபிகள் நாயகம் அன்று மக்காவில் இவ்வுலகைப் படைத்த இறைவனைப் பற்றியும் இந்த உலக வாழ்வின் நோக்கம் பற்றியும் இறுதித்தீர்ப்பு நாள் பற்றியும் மறுமையைப் பற்றியும் நல்லொழுக்க வாழ்க்கை வாழவேண்டியதன் அவசியம் பற்றியும் போதித்து இஸ்லாம் என்ற இறைநெறிக்கு மக்களை அழைத்தார்கள். அந்த சத்தியப் பிரச்சாரத்தின்போது கடவுள் கடவுள் என்று முன்னோர்கள் கற்பித்த உருவங்களையும் படைப்பினங்களையும் விட்டுவிட்டு இவ்வுலகைப் படைத்த இறைவனை நேரடியாக வணங்க மக்களை அழைத்தார்கள். அவனை பகுத்தறிவு பூர்வமாக அறிய படைப்பினங்களைப் பற்றி ஆராயத் தூண்டினார்கள். அவரது பிரச்சாரத்துக்கு உறுதுணையாக இறைவன் புறத்திலிருந்து திருக்குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டன. அவற்றில் ஒரு சிலவற்றைத்தான் இங்கே காண்கிறீர்கள். இறைவனின் உள்ளமையும் இறைமார்க்கம் கூறும் இறுதிநாள் விசாரணையும் மறுமை வாழ்வும் எல்லாம் உண்மையே என்பதைப் பகுத்தறிவு கொண்டு சிந்தித்து உணர இறைவனின் படைப்பினங்களை கூர்ந்து நோக்கவும் ஆராயவும் இறைவன் கூறுவதை இவற்றில் காணலாம்

- **38:29. (நபியே!) பாக்கியம் பெற்ற இவ்வேதத்தை உம்மீது அருளியுள்ளோம் - அவர்கள் இதன் வசனங்களைக் கவனித்து ஆய்வதற்காகவும், அறிவுடையோர் நல்லுணர்வு பெறுவதற்காகவும்.**

- **32:27. அவர்கள் கவனிக்கவில்லையா - நிச்சயமாக நாமே வரண்ட பூமியின் பக்கம் மேகங்கள் மூலமாக தண்ணீரை ஓட்டிச் சென்று அதன் மூலம் இவர்களும் இவர்களுடைய கால் நடைகளும் உண்ணக்கூடிய பயிர்களை வெளிப்படுத்துகிறோம் அவர்கள் (இதை ஆய்ந்து) நோட்டமிட வேண்டாமா?**

- **56:58. (கர்ப்பப் பையில்) நீங்கள் செலுத்தும் இந்திரியத்தைக் கவனித்தீர்களா?**

- **56:63. (இப்பூமியில்) விதைப்பதை நீங்கள் கவனித்தீர்களா?**

- **56:68. அன்றியும், நீங்கள் குடிக்கும் நீரைக் கவனித்தீர்களா?**

- **56:71. நீங்கள் மூட்டும் நெருப்பை கவனித்தீர்களா?**

## அறிவியல் புரட்சிக்கு அடித்தளமான ஆன்மீகம்

இன்னும் இவைபோன்ற ஏராளமான இறைவசனங்களை நாம் திருக்குர்ஆனில் காணலாம். அறிவைத் தேடுவதும் இறைவனின் படைப்பினங்களைப் பற்றி ஆராய்வதும் புண்ணியம் தரும் செயலே என்பதை இறைவேதத்தை அன்றாடம் ஓதும் மக்கள் உணரத் தொடங்கினார்கள். படைப்பினங்களைப் பற்றிய ஆய்வுகளை முக்கியமான கடமையாக மேற்கொள்ளத் துவங்கினார்கள். இவ்வாறுதான் நாம் இன்று காணும் - அனுபவிக்கும் -அறிவியல் புரட்சியின் வேர்கள் அடித்தளமிடத் துவங்கின. இஸ்லாம் வளர வளர இஸ்லாமிய ஆட்சியும் விரிவடைய அறிவியல் ஆய்வுகள் ஊக்குவிக்கப்பட்டன. அவற்றிற்கான தளங்கள் அமைக்கப்பட்டன. மருத்துவம், கணிதம், வானவியல், புவியியல், இரசாயனவியல் போன்ற பல துறைகளும் மக்களின் பயன்பாட்டுக்கு வந்தன.

## படைப்பின் இரகசியங்களை தாங்கி நிற்கும் அற்புத வேதம்

- **நிச்சயமாக வானங்களும், பூமியும் (முதலில்) இணைந்திருந்தன என்பதையும், இவற்றை நாமே பிரித்(தமைத்)தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம் என்பதையும் சத்தியத்தை மறுப்போர் பார்க்கவில்லையா? (இவற்றைப் பார்த்தும்) அவர்கள் நம்பிக்கை கொள்ள வில்லையா? (திருக்குர்ஆன் 21:30)**

- **நிச்சயமாக வானங்களும் பூமியும் அவை இரண்டும் விலகிவிடாதவாறு நிச்சயமாக அல்லாஹ்வே தடுத்துக் கொண்டிருக் கின்றான். அவை இரண்டும் விலகுமாயின், அதற்குப் பிறகு வேறெவரும் அவ்விரண்டையும் தடுத்து நிறுத்தமுடியாது. நிச்சயமாக அவன் பொறுமையுடையவன் மிக மன்னிப்பவன். (திருக்குர்ஆன் 35:41)**

திருக்குர்ஆன் வசனங்கள் அருளப்பட்ட காலம் முதல் தொடர்ந்து பாமர மக்களையும் படித்தவர்களையும் பகுத்தறிவு கொண்டு சிந்திக்கத் தூண்டும் வண்ணம் அவை அமைந்துள்ளதை ஆராய்வோர் அறியலாம். ஒருபுறம் அறிவியலுக்கு அடிப்படையான தூண்டுதலை வழங்குகிறது. மறுபுறம் பல ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய விடயங்கள் பால் மக்களின் கவனத்தை ஈர்க்கிறது. உதாரணமாக இக்கட்டுரையில் நாம் எடுத்தோதியுள்ள வசனங்களை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். இவை விலங்கியல் (zoology), புவியியல் (geology), வானவியல் (astronomy) போன்ற துறைகளில் ஆய்வுகள் மேற்கொள்ள தூண்டுபவையாக உள்ளதைப் பாருங்கள்.

அதேபோல பிற்காலங்களில் நவீன அறிவியலால் கண்டுபிடிக்கப்பட்ட பல உண்மைகள் திருக்குர்ஆன் வசனங்களில் புதைந்து கிடப்பதையும் நாம் காணமுடிகிறது. உதாரணமாக மேற்கூறப்பட்ட வசனங்களில் - மலைகள் பூமியில் முளைகளைப் போல் ஆழமாக நாட்டப்பட்டுள்ளன என்ற உண்மை, பெருவெடிப்புக் கொள்கை (bigbang theory), உயிர்களின் தோற்றம் நீரிலிருந்தே (aquatic origin), கோள்களுக்கு இடையே புவிஈர்ப்பு விசை (gravitational force) போன்ற உண்மைகள் புதைந்திருப்பதைக் காணமுடிகிறது.

# அறிவியல் எழுச்சியில் இஸ்லாத்தின் பங்கு


## அறிவியலுக்கு எதிராக எழுந்த ஆன்மீகம்

கி.பி. 500ம் ஆண்டு முதல் 1500ம் ஆண்டுவரையுள்ள காலம் மத்தியகாலம் என வரலாற்றில் அழைக்கப்படுகிறது. இருண்ட காலம் என்றும் வர்ணிக்கப்படும் இக்காலப் பிரிவில் ஐரோப்பிய நாடுகள் கூட கலை, கல்வி, கலாசார ரீதீயில் பெரிய வீழ்ச்சியைக் கண்டிருந்தன. இயேசுநாதரின் விண்ணேற்றத்திற்குப் பிறகு சுமார் முன்னூறு வருடங்கள் வரை மக்கள் அவர் போதித்த ஏக இறைக் கொள்கையிலேயே நீடித்தனர். பின்னால் நுழைந்த இடைத் தரகர்களால் அவர் கொண்டுவந்த மார்க்கத்தில் பல மூடநம்பிக்கைகள் புகுந்ததன் விளைவாக கிறிஸ்தவ உலகு அறிவியல் துறைக்கெதிரான அறிவிக்கப்படாத யுத்தத்தையே தொடங்கியிருந்தது.

கி.பி. 283ல் எகிப்திய ஆட்சிப்பீடத்திலேறிய இரண்டாம் தொலமி அலெக்சாந்திரியாவில் நிறுவியிருந்த பிரமாண்டமான நூல் நிலையத்தை தியோபிளஸ் எனும் பாதிரியின் தூண்டுதலால் கி.பி. 391ல் மதவாதிகள் தீயிட்டுக் கொழுத்தினர். அறிவியலை மதத்தின் பெயரால் எதிர்த்தவர்கள் அறிஞர்களையும் விட்டுவைக்கவில்லை. 'இயேசு கிறிஸ்துவுக்குப்பின் எந்த விஞ்ஞானத்துக்கும் இடமில்லை, அவருடைய போதனைகளுக்குப் பின் எந்தவிதமான விஞ்ஞானப் போதனைகளும் தேவையில்லை. என்று போதிக்கப்பட்டதால் விஞ்ஞானிகள் பலர் மதப்பிரிவினரால் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

## இஸ்லாமின் வருகையால் அரபுமண்ணில் அறிவியல் எழுச்சி

சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு முஹம்மது நபி அவர்களின் வருகை அதுவரை அறியாமை இருளில் மூழ்கியிருந்த அரபு மக்களை பண்பாடு மிக்கவர்களாக மாற்றியது. இஸ்லாம் என்ற இறைநெறியை ஏற்று வாழத்துவங்கிய அவர்களிடையே இறைவேதம் திருக்குர்ஆனின் தாக்கம் அறிவுத்தாகத்தையும் அறிவியலில் மோகத்தையும் உண்டாக்கியது. இஸ்லாம் ஊக்குவிப்பதைப் போல அறிவைத் தேடி பயணங்கள் மேற்கொண்டார்கள் அவர்கள். பண்டைய அறிவியல் செல்வங்களைத் தேடி வந்து பெற்று அவற்றை மேலும் மெருகூட்டும் பணியில் மும்முரமாக ஈடுபட்டார்கள்.



● மேற்குறித்த நிலை பற்றி பிரபல வரலாற்றாசிரியரான H.G.Wells தனது நூலில், 'முதல் முதலில் கிரேக்கரே தத்துவ விசாரணையை ஆரம்பித்தனர். அவர்களுக்குப் பின்னர் அரேபியர் அம்முறையைத் தொடர்ந்தனர். அரிஸ்டோடில் விதைத்த தத்துவம், அலெக்ஸாந்திரியாவில்

புகழ்பெற்ற நூதனசாலையில் கவனிப்பாரற்றுக் கிடந்தது. இவை அரேபியரின் எழுச்சிக்குப் பின்னரே முளைவிட்டு பழம் தரத் துவங்கின' என்று குறிப்பிடுகின்றார்.

## அறிவியலை அழிவில் இருந்து பாதுகாத்தல்


அழிவின் விளிம்பிலிருந்த அறிவியலை முஸ்லிம்கள் பாதுகாத்திருக் காவிட்டால் பழம் பெரும் அறிவியல் பொக்கிஷங்கள் பல இன்றைய உலகுக்குக் கிடைக்காது போயிருக்கலாம். அழிவிலிருந்து அறிவியலைப் பாதுகாத்தமை முஸ்லிம்கள் அறிவியல் உலகுக்குச் செய்த மிகப் பெரும் சேவையாகும். இது குறித்து பேராசிரியர் Stanislas Guyand அவர்கள் தனது Encyceopadie des science religieusus என்ற ஜேர்மனிய நூலில்,

- 'மத்தியகால வரலாறுகளிலேயே இஸ்லாத்தின் வரலாறு நாகரிகத்தின் வரலாறாகவே விளங்குகிறது. புறக்கணிக்கப்பட்ட கிரேக்க விஞ்ஞானத்தையும் தத்துவ சாத்திரங்களையும் அழிவிலிருந்து பாதுகாத்து, மேற்குலகை எழுச்சிபெறச் செய்து அறிவியக்க வளர்ச்சிக்குக் காரணகர்த்தாக்களாக இருந்ததற்காக நாம் முஸ்லிம்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். ஏழாம் நூற்றாண்டில் பழைய உலகம் மரண வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தபோது அரேபியர்கள் பெற்ற வெற்றி இந்த உலகில் புதிய குருதியைப் பாய்ச்சியது.' என்று குறிப்பிடுவது மிகைப்படுத்தப்பட்டதொரு கூற்றல்ல.

இதே கருத்தை C.E. Storss என்ற அறிஞர் Many Greeds - One cross என்ற நூலில்,

- 'இருள் அடைந்திருந்த யுகத்தில் விஞ்ஞானம், தத்துவம் போன்ற ஒளிச்சுடர்களை உயரப்பிடித்திருந்த பெருமை அரேபிய முஸ்லிம்களையே சாரும். அவர்களே அரிஸ்டோட்டில், பீளேட்டோ, இயுக்லித் தொலமி ஆகியோரின் நூல்களை அறபு மொழியில்பெயர்த்து பாதுகாத்தனர். அவர்களாலேயே இந்நூல்களை மறுமலர்ச்சிக்காலத்தில் ஐரோப்பியரும் தத்தம் மொழிகளில் பெற்றுக்கொள்ள முடிந்தது' என்று குறிப்பிடுகின்றார்.


அன்று அரேபியர் ஏற்படுத்திய அறிவியல் எழுச்சிதான் இன்றைய ஐரோப்பாவின் அறிவியல் தொழிநுட்ப முன்னேற்றத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது என்பதை மேற்படி கூற்றுக்கள் உறுதி செய்கின்றன..



## ஸ்பெயினும் இதர ஐரோப்பிய உலகும்


ஸ்பெயினில் இஸ்லாம் பரவி வளர்ச்சி கண்ட போது முஸ்லிம் உலகும், ஐரோப்பிய உலகும் எப்படி இருந்தன என்பது பற்றி விக்டர் ராபின்ஸன் (Victor Robinson) தனது 'மருத்துவத்தின் கதை'

(The Story of Medicine) என்ற நூலில் குறிப்பிடும் போது,




*Europe was darkened at sunset, Cordova shone with public lamps; Europe was dirty, Cordova built a thousand baths; Europe was covered with vermin, Cordova changed its undergarments daily; Europe lay in mud, Cordova's streets were paved; Europe's palaces had smoke-holes in the ceiling, Cordova's arabesques were exquisite; Europe's nobility could not sign its name, Cordova's children went to school; Europe's monks could not read the baptismal service, Cordova's teachers created a library of Alexandrian dimensions.*

● 'ஐரோப்பிய நாடுகள் சூரியன் மறைந்தவுடன் இருளில் மூழ்கி விடும். முஸ்லிம் ஸ்பெயினைச் சேர்ந்த குர்துபாவிலோ தெரு விளக்குகள் ஒளி விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கி விடும். ஐரோப்பா அழுக்கடைந்திருந்தது. குர்துபா (Cordova) விலோ 1000 குளியலறைகள் கட்டியிருந்தார்கள். ஐரோப்பா துர்நாற்றத்தால் மூடுண்டு கிடந்தது. குர்துபாவில் வாழ்ந்தவர்களோ தமது உள்ளாடைகளை தினமும் மாற்றி வந்தார்கள். ஐரோப்பா சேற்றில் மூழ்கிக் கிடந்த போது, குர்துபாவில் தளம் போடப்பட்ட பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. ஐரோப்பாவின் அரண்மனைக் கூரைகளிலேயே கரும்புகை படிந்திருந்த போது, குர்துபாவிலிருந்த மாளிகைகள் அரபுக் கலை நுட்பங்களால் அலங்கரிக் கப்பட்டிருந்தன. ஐரோப்பாவின் பிரபுக்களுக்கு கையெழுத்து போடத் தெரியாமலிருந்த காலத்திலேயே குர்துபாவின் சிறுவர்கள் பாடசாலைக்குப் போய்க் கொண்டிருந்தனர். ஐரோப்பாவின் மத குருமார்கள் ஞானஸ்நானச் சடங்குகளுக்குரிய சுலோகங்களை வாசிக்கத் தெரியாதிருந்த சமயத்தில் குர்துபாவின் ஆசிரியர்கள் பெரும் நூல் நிலையங்களை நிறுவிக் கொண்டிருந்தார்கள்!" என்று குறிப்பிடுகின்றார்.



'ஐரோப்பாவில் லௌகீகத் துறையிலும் ஆன்மீகத் துறையிலும், அறியாமை இருள் சூழ்ந்திருந்தபோது ஸ்பெயின் முஸ்லிம்கள் சிறப்பு வாய்ந்த நாகரிகத்தையும் ஸ்தீரமான பொருளாதார வாழ்க்கையையும் அமைத்திருந்தார்கள். கலை, விஞ்ஞானம், தத்துவம், கவிதை முதலிய துறைகளின் வளர்ச்சியில் முஸ்லிம் ஸ்பெயின் பெரும் பங்கெடுத்தது. அவர்களின் கருத்துக்களின் செல்வாக்கு 13ம்

நூற்றாண்டில் வாழ்ந்த தோமஸ் அக்யனாஸ், தாந்தே போன்ற தத்துவ ஞானிகளின் சிந்தனைகளையும் தாக்கத் தவறவில்லை. முஸ்லிம் ஸ்பெயின் ஐரோப்பாவின் ஒளிவிளக்கைப் போல விளங்கியது.

இக்கூற்று அன்றைய அவர்களது அறிவியல் எழுச்சியின் தாக்கம் நீண்ட நெடிய வரலாறுடையது என்பதையும் ஐரோப்பாவின் மறுமலர்ச்சித் தொட்டிலாக திகழ்ந்தது ஸ்பெயினே என்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

பேராசிரியர் பிலிப் கே. ஹிட்டி History of Arabs எனும் தனது நூலில்

● 'மத்திய கால ஆரம்பத்தில் மனித இனத்தின் முன்னேற்றத்திற்காகப் பணியாற்றியவர்கள் அரேபியர்களைப் போல வேறு எவரும் இல்லை' என்று கூறுகிறார்.

**நன்றி: SMH இஸ்மாயில் சல∴பி**

# வாசகர் எண்ணம்

● மார்ச் மாத இதழ் பற்றி... காலத்திற்கேற்ற சிறப்பான வழிகாட்டலாக அமைந்திருந்தது , "பெண் குழந்தை என்ற அருட்கொடை" கட்டுரை " "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு " ஆனால் அது பெண் குஞ்சாக இல்லாத வரை " என்ற பாடல் என் நினைவிற்கு வந்தது. தெளிவற்ற சிந்தனை உடையோருக்கும் பெண் குழந்தையின் மாண்பை புரிய வைத்த கட்டுரை மிக அருமை. "குழந்தை செல்வங்களின் இழப்பை ஈடு செய்வது யார் ?" சரியான கேள்வியை தலைப்பாக வைத்து சிறப்பான இறை வசனங்களில் பதிலைச் செம்மையுறத் தந்துள்ள நேர்த்திக்கு நன்றி. சமுதாயத்தின் மேலுள்ள அக்கறை சமூக நீதிக்கான செயல்பாடு இரண்டுமே தங்கள் சிறப்பு. **-தஞ்சை என்.ஜே.கந்தமாறன், சென்னை**

● திருக்குர்ஆன் நற்செய்தி மலரைப் படிக்க நேர்ந்தது. மிக அருமையாக இருந்தது. தொடர்ந்து படிக்க விரும்புகிறேன்.

**-A. நவாப், மணிமங்கலம், திருச்சி**

● மார்ச் இதழ் கடைசி பக்கத்தை பார்த்தவுடன் திகில் அடைந்தேன். "உங்களை நேசிக்க வந்த ஜீவன் அது" என்ற வரியை படித்தவுடன் ஒரு கணம் நெஞ்சு அடைத்து கொண்டு ஆடிவிட்டது போல் நான் உணர்ந்தேன். ஸ்கேன் செண்டர்களில் நடக்கும் நிகழ்வுகளை பார்க்கும்போது நெஞ்சு பதறி விடுகிறது. பெயர் அளவில் ஆண் பெண் பாலினம் பார்த்து அறிவிப்பதில்லை என்று சொல்லிவிட்டு, பெண் குழந்தைதான் என தெரிந்தவுடன் குழந்தை நன்றாக இல்லை. என ஒரே வரியில் சொல்லிவிட்டு, கலைத்து விடுங்கள் என சொல்லி விடுகிறார்கள். அப்படியே பிறந்தாலும் குருடு செவிடு ஊனம் என்று பயமுறுத்தி விடுகிறார்கள். இது எல்லா இடத்திலும் நடக்கிறது. அரசு நிலையங்கள் மட்டும் கிடையாது. தனியார்கள் இதன் மூலம் பணம் சம்பாதித்து கொள்கிறார்கள். என்ன செய்வது? சோகத்தின் முடிவை நினைத்து மறுங்கி போய்தான் வர வேண்டி உள்ளது. மக்களின் மனங்கள் என்று மாறுகிறதோ அன்றுதான் பெண் குழந்தைகளுக்கு முழு பாதுகாப்பு கிடைக்கும். உலகம் அழியும் வரை இந்த பெண் சிசு கொலைகள் நடந்து கொண்டுதான் இருக்கும். இதை யாரும் தடுக்க முடியாது. முயற்சிகள் மேற்கொள்வோம். பெண் குழந்தைகளை காப்பாற்றுவதற்கு. இறைவன் உதவிகளை செய்யட்டும். ஆமீன்.

**-T.M. பெரோஸ்கான், தேனி .**

# அறிவியலில் இஸ்லாமியர்களின் பல்துறைப் பங்களிப்பு

இஸ்லாம் என்றால் இவ்வுலகைப் படைத்த இறைவன் கற்பிக்கும் ஏவல்-விலக்கல்களுக்கு கட்டுப்பட்டு வாழ்தலாகும். அவ்வாறு கட்டுபாட்டு வாழும் போது இவ்வுலக வாழ்க்கையும் செழிப்புள்ளதாக அமையும். மறுமை வாழ்க்கையில் சொர்க்கம் என்ற நிரந்தர வாழ்விடத்தையும் அது பெற்றுத்தரும். இனம், இடம், நாடு, மொழி, நிறம் போன்றவற்றைக் கடந்து அனைத்து மனிதகுல அங்கத்தினர்களுக்கும் பொதுவானது இஸ்லாம். மனித வாழ்வின் அனைத்துத்துறைகளிலும் வழிகாட்டும் வாழ்வியலான இஸ்லாத்தை ஏற்று அதன்படி வாழ்ந்த சமூகம் அறிவியலில் செய்த சாதனைகளைப் பற்றித்தான் இங்கே கண்டு வருகிறோம்.

● அமெரிக்க விஞ்ஞான வரலாற்றாசிரியரான ஜார்ஜ் ஸார்ட்டன் (George Sarton) தனது ‘விஞ்ஞான வரலாறு பற்றிய அறிமுகம்’ (Introduction to the History of Science) என்ற நூலில் இது குறித்து பின்வருமாறு கூறுகின்றார்.

“மனித இனத்துக்குத் தேவையான பிரதான பணிகள் அனைத்தும் முஸ்லிம்களால் நிறைவு செய்யப்பட்டு விட்டது. பெரும் தத்துவ ஞானியான அல்பராபி முஸ்லிமாகவே இருந்தார். மேலும் கணித மேதைகளான அபூகாமில், இப்றாஹீம் பின் ஸினான் ஆகியோரும் முஸ்லிம்களே. பெரும் புவியியலாளரும், கலைக்களஞ்சியவியலாளருமான அல்மஸ்வூதியும் ஒரு முஸ்லிமே. பெரும் வரலாற்றாசிரியரான அத்தபரியும் கூட ஒரு முஸ்லிமாகவே இருந்தார்!”

● **Marquis of Dufferin** : "It is to Musalman science, Musalman art and Musalman literature that Europe has been in a great measure indebted for its extrication of darkness in the middle ages". (Speeches delivered in India and London, 1980 Marquis of Dufferin & Ava)

அறிஞர் 'Marquis' தனது சொற்பொழிவுகளில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

“ஐரோப்பா இடைக்காலத்தில் அறியாமை எனும் இருளை விட்டு வெளிவரக் காரணமாக இருந்ததற்கு முஸ்லிம்களின் கலை, முஸ்லிம்களின் விஞ்ஞானம், முஸ்லிம்களின் இலக்கியம் ஆகியவற்றிற்கு அது (ஐரோப்பா) பெருமளவில் நன்றிக் கடன்பட்டிருக்கிறது.“ ஏனென்றால் 8ஆம் நூற்றாண்டு முதல் 12ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியானது ஐரோப்பா அறியாமை எனும் இருட்டில் தத்தளித்துக் கொண்டிருந்த காலப்பகுதியாகும் இக்காலப்பகுதியில் முஸ்லீம்களின் கண்டுபிடிப்புக்கள் அசாத்தியமான வைகளாகும். இந்த நான்கு நூற்றாண்டு களிலும் வரலாறு சான்று பகரும் அளவுக்கு முஸ்லீம்கள் வளர்ச்சியடைந்திருந்தார்கள் என்ற உண்மை சிலுவை யுத்தங்களுக்குப் பிறகு மேற்கத்திய உலகால் இருட்டடிப்பு செய்யப்பட்டது.”



● இதே போன்று ஸ்பெய்னின் அறிவியல் வரலாறு பற்றிக் கூறும் போது, ஸ்பெயினில் முஸ்லிம்கள் (Moors in Spain) என்ற நூலில் கணிதம், வானியல், தாவரவியல், வரலாறு, தத்துவம், சட்டம் முதலிய அறிவுத் துறைகள் ஸ்பெய்னில் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# முஸ்லிம்களும் மருத்துவமும்

நோய்க்கு மருந்து செய்யக் கூடாது என்று கிறிஸ்தவத்தில் பலர் நம்பிக்கொண்டிருக்கும் போது இஸ்லாம் மருத்துவம் பற்றிப் பேசியது. அனைத்து நபிமொழி நூற்களிலும் மருத்துவம் குறித்த நபிமொழிகளைக் காணலாம். புகாரி என்ற நபிமொழித் தொகுப்பு நூலில் கிதாபுத் திப் - மருத்துவம் பற்றிய பாடத்தில் சுமார் *30* நபிமொழிகள் மருத்துவம் பற்றிப் பேசுகின்றன. 'நோய் வந்தால் மருத்துவம் *செய்யுங்கள்!"* என்ற நபிமொழியும், 'எல்லா நோய்களுக்கும் *மருந்துண்டு!"* என்ற நபிமொழியும் அது குறித்த ஆய்வை ஊக்கப்படுத்தின.

இவ்வகையில் முஸ்லிம்கள் பல்துறை மருத்துவம் குறித்தும் ஆய்வு செய்தார்கள். நபி(ஸல்) அவர்களே தேன், கருஞ்சீரகம், இரத்தம் குத்தியெடுத்தல் போன்ற மருத்துவ முறைகளைப் பரிந்துரைத்துள்ளார்கள். நவீன மருத்துவத்தில் அவை இன்றும் பெரிதும் செல்வாக்குப் பெற்று வருகின்றது.

● மருத்துவத் துறையில் அலீ இப்னு ஸீனாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். ஐரோப்பாவில் Avicenne (அவி சென்னா) என அறிமுகமாகியுள்ள இவர் மருத்துவம் சம்பந்தமாக *17* நூற்களை



எழுதினார். அவற்றில் அல்கானூன் பித்திப் (மருத்துவ விதிகள்) என்பது பிரதானமானதாகும். இந்நூல் 17 ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டமாகத் திகழ்ந்தது. இந்நூல் மருத்துவ உலகின் பைபிள் என்றும், மருத்துவ உலகின் வேத நூல் என்றும் புகழப்படுகிறது. (Encyclopaedia Americana)

இவ்வாறே இவர் 'கிதாபுஷ் ஷி∴பா' (சிகிச்சை நூல்) என்ற பெயரில் 18 பாகங்களைக் கொண்ட ஒரு நூலை எழுதினார். இந்நூல் மருத்துவத்துடன் தொடர்புபட்ட உளவியல் குறித்து விரிவாகப் பேசுகின்றது.

இவரது மருத்துவ சேவை அறிவியல் திறமைகளால் இவர் பல புகழாரங்களைப் பெற்றார். நவீன மருத்துவத்தின் தந்தை (Father of Modern Medicine) என ஐரோப்பாவில் இவரை அழைக்கின்றனர். இவ்வாறே இரண்டாம் அரிஸ்டாட்டில், ஷெய்குல் ரயீஸ் போன்ற பெயர்களால் இவர் சிறப்பித்து அழைக்கப்படுகின்றார்.

மருத்துவத் துறைக்கு இப்னு ஸீனா மட்டுமின்றி பல அறிஞர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர். ஹுனைன் பின் இஸ்ஹாக், அலி அத்தபரி, அர்ராஷி, அலீ பின் அப்பாஸ், அல்கும்ரி, முஹம்மத் அல்தமீமி, இப்னு ஜஷ்ஷார், அஷ்ஷஹ்ராவி போன்ற பல அறிஞர்களும் மருத்துவத் துறை சார்ந்த நூற்களை எழுதியும், புதிய கண்டுபிடிப்புக்களையும், நடைமுறைகளையும் அறிமுகப்படுத்தியும் வந்துள்ளனர்.

# வானியல் துறையும் முஸ்லிம்களும்

ஆரம்ப காலம் தொட்டே அரேபியர் தூர இடங்களுக்கு வர்த்தகப் பயணங்களை மேற்கொண்டு வந்தனர். இஸ்லாம் வளர்ச்சி பெற்று இஸ்லாமிய சாம்ராஜ்யம் விரிவான போது அவர்களது வர்த்தக எல்லை



உலகளாவிய அளவில் விருத்தி கண்டது. பாலைவனத்தில் பயணம் செய்யவும், கடல் மார்க்கமாகப் பயணம் செய்யவும் வானியல் அறிவு அவர்களுக்கு அவசியப்பட்டது.

அத்துடன் அல்குர்ஆன் வானம் பற்றியும், சூரியன்-சந்திரன்-, பிறையின் வளர்ச்சி - தேய்வு மற்றும் நட்சத்திரம் பற்றியெல்லாம் பல இடங்களில் பேசுகின்றது. இரவு - பகல் மாறி மாறி வருவது குறித்துச் சிந்திக்குமாறும் குர்ஆன் கூறுகின்றது. எனவே அவர்கள் வானியல் ஆய்விலீடுபட்டனர்.

## மறைக்கப்பட்ட உண்மைகள்

'ஐரோப்பிய வளர்ச்சியின் ஒரு வரலாறு' (A History of Development of Europe) என்ற நூல் பேசும் போது, 'விஞ்ஞானத்தில் நாம் எவ்வளவு தூரம் முஸ்லிம்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம் என்ற உண்மையை ஐரோப்பியர் திட்டமிட்டு மறைத்து விட்டனர். மதத் துவேஷத்தாலும், போலியான தேசியப் பெருமையாலும் நடந்த அநீதி எக்காலமும் நிலைத்து விடாது! அரேபியர் ஐரோப்பியருக்களித்த அறிவுச் செல்வம் பற்றிய உண்மைகளை மறைத்த கிறிஸ்தவ உலகம், அதி விரைவில் தனது குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். அரேபியர் நமக்களித்த அறிவை எல்லோரும் பார்க்கும் வண்ணம் வானத்தில் கூட எழுதி வைத்து விட்டார்கள். இதற்கு வானத்திலுள்ள விண்மீன்களுக்கு அவர்கள் அளித்துள்ள பெயர்களைப் பார்த்தாலே போதுமானதாகும்!" என்று குறிப்பிடுகின்றது.

## அரபு மொழியில் மொழியாக்கம்

வானியல் துறையில் முஸ்லிம்களின் எழுச்சி அப்பாஸிய ஆட்சிக் காலத்தில்தான் பெரிதும் வளர்ச்சி கண்டது. இந்திய -பாரஸீக - கிரேக்க வானியல் நூல்களை அரபு மொழியில் மொழியாக்கம் செய்து அவற்றை விமர்சன ரீதியில் முஸ்லிம் அறிஞர்கள் அணுகினர். பிரம்மகுப்தா போன்ற இந்திய வானியல் அறிஞர்களின் நூல்களும் மொழியாக்கம் செய்யப்பட்டது. சித்தார்த்த என்ற சமஸ்கிருத நூலும் அரபுலகுக்கு அறிமுகம் செய்யப்பட்டது. பைத்துல் ஹிக்மா அமைப்பின் மொழியாக்கப் பணிகள் நூற்றுக்கணக்கான வானியல் அறிஞர்களை இஸ்லாமிய உலகில் உருவாக்கியது.



- இஸ்பஹானைச் சேர்ந்த இப்றாஹீம் அல்பஷாரி என்பவர் முஸ்லிம்களில் முதன் முதலில் விண்பொருட்களின் குத்துயரத்தை கணக்கிட அஸ்துர்லாப் (அதுவே பிற்காலத்தில் ஆங்கிலத்தில் astrolabe ஆனது) கருவியைக் கண்டுபிடித்தார். முஸ்லிம்கள் கஅபா திசையை அறியவும், தொழுகை நேரத்தை அறியவும் இக்கருவியைப் பயன்படுத்தி வந்தனர். இக்கருவியை மேற்குலகம் கப்பல் பயணம் சார்ந்த விஷயங்களுக்காக 17 ஆம் நூற்றாண்டு வரை பயன்படுத்தி வந்தது.

இவரைப் போன்றே வானியல் துறையில் அல்குவாரிஷ்மி குறிப்பிடத்

தக்கவராவார். இவர் தயாரித்த வானியல் அட்டவணை பற்றி பேராசிரியர் ஹிட்டி குறிப்பிடும் போது, ‘இவரது வானியல் அட்டவணைகள் கிழக்கிலும், மேற்கிலும் மற்ற வானியல் அட்டவணைகளுக்கும், நூற்களுக்கும் அடிப்படைத் தளங்களாக அமைந்தன!” என்று குறிப்பிடுகின்றார்.

இவரைப் போன்றே ஹபஷ் அல்ஹாஸிப் என்பவர் சூரிய-சந்திர கிரகணங்கள் குறித்த ஆய்வையும், வானியல் தோற்றப்பாடுகளை ஆராய்வதற்காகவும் 40 ஆண்டுகளைச் செலவிட்டார். சூரியனின் குத்துயரத்தைப் பயன்படுத்திக் கிரகணம் நிகழும் நேரத்தைக் கணிக்கும் முறையை முதன் முதலில் தந்தவர் இவராவார்.

இவ்வாறு பனூ மூஸா, அபூமஅஷர் அல்பல்கீ, அல்கின்தீ, தாபித் பின் குர்ரா அபுல் அப்பாஸ் பின் நய்ரீசீ அல்பத்தானி போன்ற பல அறிஞர்களும் வானியல் துறைக்கு பங்களிப்புச் செய்தனர். முஸ்லிம் கலீ∴பாக்களும் (ஆட்சியாளர்களும்) அறிவியல் துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றனர். பல வானியல் ஆய்வு நிலையங்களை அமைத்து, அதில் பணியாற்ற ஆய்வாளர்களை அமர்த்தியும் அவர்கள் தமது பங்கைச் செம்மையாகச் செய்தனர். மொழி பெயர்ப்புப் பணிக்குப் பெரிதும் ஒத்துழைப்பாக அப்பாஸிய ஆட்சி திகழ்ந்தது.

# முஸ்லிம்களும் புவியியல் துறையும்

திருக்குர்ஆன் வானம் பூமியின் படைப்புப் பற்றிப் பேசுகின்றது. புவி பற்றியும், மலைகள் புவிக்கு முளைகளாக அமைக்கப்பட்டிருப்பது குறித்தும், விளை நிலங்கள் குறித்தும் பேசுகின்றது.

● **நீங்கள் பூமியில் பயணித்து, அவன் படைப்பை எப்படி ஆரம்பித்தான்? என்பதைப் பாருங்கள்! பின்பு அல்லாஹ்வே மறு தடவையும் உற்பத்தி செய்கின்றான். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றின் மீதும் பேராற்றலுடையவன். (திருக்குர்ஆன் 29:20)**



● **“பூமியில் நீங்கள் சுற்றி வந்து, (அல்லாஹ்வின் வசனங்களைப்) பொய்ப்பித்தவர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதை நீங்கள் கவனித்துப் பாருங்கள்” என்று (நபியே!) நீர் கூறுவீராக. (திருக்குர்ஆன் 6:11)**

எனவே, பூமியில் பயணித்து ஆய்வு செய்யும் ஆர்வம் முஸ்லிம் உலகில்

ஏற்பட்டது. பிரச்சாரப் பணிக்காகவும், வர்த்தகத்திற்காகவும் தொடர்ந்து பயணம் செய்த முஸ்லிம்கள் புவியியல் அறிவை இயல்பிலேயே பெற்றனர். அடுத்துப் புவியெங்கும் தர்மத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற அவர்களது தணியாத தாகமும், நாடுகள் பற்றிய அறிவில் அவர்களுக்கு ஆர்வத்தையூட்டின. இந்த வகையில் புவியியல் துறையில் அவர்கள் ஆர்வத்துடனும் ஆய்வுக் கண்ணோட்டத்துடனும் தடம் பதித்தனர். இதற்கு இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் விரிவும் பெரிதும் துணையாக அமைந்தது.

● பாரசீக வணிகரான சுலைமான் அல்தானி என்பவர் சீனா, இந்தியா போன்ற நாடுகளின் புவியியல் நிலை பற்றிய விவரங்களை முதன் முதலில் அரபியில் எழுதினார்.

● அல்இத்ரீஸி என்ற அறிஞர் ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆசியா ஆகிய 3 கண்டங்களிலும் சுற்றுப் பயணம் செய்து ஆய்வுகள் செய்தார். சிசிலி மன்னர் இரண்டாம் ரொஜரின் கட்டளைப் பிரகாரம் முதன் முதலில் உலக வரைபடத்தை வரைந்து அதை வெள்ளித் தட்டில் பதித்தார். இவர் எழுதிய நுல்ஹதுல் முஸ்தாக் எனும் நூல் 70 தேசப் படங்களைக் கொண்டிருந்தது.


இப்னு பதூதா, நாஸிரே குஷ்ரு போன்ற பயணிகளின் பணிகளும் புவியியல் துறைக்குப் பெரும் பயனளிப்பதாக இருந்தது. நாஸிரே குஷ்ரு எழுதிய 'ஸபர் நாமா' எனும் நூல் அவரது பயண இலக்கிய நூலாகும்.

இந்தத் துறைகள் மட்டுமன்றிக் கணிதம், பௌதீகவியல், தாவரவியல், விலங்கியல் என அனைத்துத் துறைகளிலும் முஸ்லிம்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். இது வரலாற்றில் மறக்க முடியாத அளவுக்கு பளிச்சிடும் அம்சமாகும். ஐரோப்பிய உலகு மதத் துவேஷத்தின் காரணத்தினாலும், பிரதேச வேறுபாட்டின் காரணத்தினாலும் இந்த உண்மைகளை மறைக்க முயன்றாலும் நியாய உள்ளம் கொண்ட அறிஞர்கள் மூலம் இந்த உண்மை உறுதி செய்யப்பட்டு வருகின்றது.

**நன்றி: SMH இஸ்மாயில் சல.ஃபி**

# யாசகம் தவிர்!

"உங்களில் ஒருவர் காலையில் ஒரு கயிற்றை எடுத்துக்கொண்டு (சென்று), விறகு வெட்டி அதைத் தமது முதுகில் சுமந்து (விற்றுப் பிழைத்து), மக்களிடம் கையேந்தாமல் தன்னிறைவுடன் (சுயமரியாதையுடன்) வாழ்வதும் அதைத் தர்மம் செய்வதும், ஒரு மனிதனிடம் யாசிப்பதைவிடச் சிறந்ததாகும். அவருக்கு அவன் கொடுத்தாலும் சரி மறுத்தாலும் சரி. மேலிருக்கும் கை, கீழிருக்கும் கையைவிடச் சிறந்ததாகும். மேலும், உனது வீட்டாரிலிருந்தே உனது தர்மத்தைத் தொடங்கு!"



- நபி மொழி (நூல்: முஸ்லிம்)

# இஸ்லாமியரின் அறிவியல் வீழ்ச்சிக்கான காரணங்கள்

## இஸ்லாம் இனம் சார்ந்ததல்ல

இஸ்லாம் என்பது நம்மைப் படைத்த இறைவன் வகுத்து வழங்கும் வாழ்க்கை நெறி என்பதை அறிவீர்கள். அந்த இறைவனின் வழிகாட்டுதல்படி கட்டுப்பாடான வாழ்க்கையை பின்பற்றும்போது நமது தனி நபர் வாழ்விலும் குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் ஒழுக்கத்தையும் அமைதியையும் காணமுடியும், அவ்வாறு வாழ்ந்ததற்கு இறைவனிடம் இருந்து பரிசாக மறுமையில் சொர்க்கமும் கிடைக்கும். யார் இந்த வாழ்க்கையை வாழ்கிறாரோ அவரே முஸ்லிம் - அதாவது கீழ்படிபவர் - என்று அழைக்கப் படுகிறார். இனம், இடம், மொழி, நிறம் என்ற வேறுபாடுகளைக் கடந்து யார் வேண்டுமானாலும் இக்கொள்கையை ஏற்று வாழலாம். இதற்கு எந்தத் தடையும் இல்லை.

அதேநேரத்தில் ஒரு தொப்பியோ தாடியோ வைப்பதனாலோ அரபு மொழியில் பெயர் வைப்பதனாலோ முஸ்லிம் பெற்றோருக்கு பிறந்துவிட்டாலோ யாரும் முஸ்லிமாக முடியாது. முழுக்கமுழுக்க பின்பற்றுதல் மூலம் மட்டுமே ஒருவர் முஸ்லிமாக முடியும் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதுவும் பின்பற்றும் வரைதான் ஒருவர் முஸ்லிமாக இருக்கிறார். பின்பற்றுவதை விட்டுவிட்டால் இஸ்லாத்தை விட்டு வெளியேறியும் விடுகிறார்.

## வீழ்ச்சியும் இயல்பே!

ஒரு சமூகம் கூட்டாக நின்று இறைவனின் வழிகாட்டுதலை ஏற்று வாழுமானால் அங்கு சமூகப்புரட்சிகளும் மக்களிடையே சமத்துவமும் சகோதரத்துவமும் விட்டுக்கொடுத்து வாழும் தன்மை போன்ற பல்வேறு நன்மைகளும் உண்டாகும். வாழ்வின் பல்வேறு துறைகளில் மறுமலர்ச்சியும் உண்டாகும். எப்போது இதில் தளர்ச்சி அல்லது பின்பற்றல் குறைகிறதோ அப்போது வீழ்ச்சியும் இயல்புதானே? அண்ணல் நபிகளாரையும் கலீபாக்களையும் தொடர்ந்து இஸ்லாம் வளர வளர இஸ்லாமிய சாம்ராஜ்ஜியமும் விரிவடைய விரிவடைய பல்வேறு துறைகளிலும் புரட்சியும் எழுச்சியும் உண்டானது. அவற்றில் ஒன்றுதான் நாம் மேலே கண்ட அறிவியல் எழுச்சி. இப்போது வீழ்ச்சிக்கான காரணத்தை நீங்களே ஊகிக்கலாம்.

அறிவியல் துறையில் முஸ்லிம்கள் தேக்க நிலையை அடைந்தமைக்குப் பல காரணங்கள் இருந்தாலும் ஒருசிலவற்றை மட்டும் இங்கு காண்போம்:

- **திருக்குர்ஆன் மற்றும் நபிவழியில் இருந்து விலகல்**

முஸ்லிம்கள் வழிபாடு என்ற பரந்த விடயத்தைக் குறிப்பிட்ட சில கிரியைகளுக்குள் சுருங்கிக் கொண்டனர். வானம், பூமி, நட்சத்திரம், கோள்கள் பற்றியெல்லாம் சிந்திப்பதும், அல்லாஹ்வின் படைப்புக்களின் அற்புதங்களை ஆராய்வதும் வழிபாடாக அவர்களால் நோக்கப்படவில்லை. திருக்குர்ஆனையும், நபிவழியையும் முழுமையாக ஆராய்வது குறைவடைந்தது. திருக்குர்ஆனை பொருளுணர்ந்து படிக்காமல் வெற்றுச் சடங்கு போல படிக்கத் துவங்கினார்கள்.

### ● அரசியல் பலவீனம் அல்லது வீழ்ச்சி

பிற்கால இஸ்லாமிய அரசியல் நலிவுற்று இறுதியில் கிலாபத் வீழ்ச்சி கண்டமையும் அறிவியல் துறை தேக்கமடைந்தமைக்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும். முற்கால ஆட்சியாளர்களின் ஆதரவு பிற்காலத்தில் இத்துறைக்குக் கிடைக்கவில்லை. அதற்குக் கலீபா மன்சூர், மாமூன், ஹாரூன் அல் ரீத் போன்ற கல்வித்தாகமுடைய கலீபாக்கள் இல்லாது போனமை முக்கிய காரணமாகும்.

### ● யுத்தங்களும் படையெடுப்புக்களும்

வரலாறு நெடுகிலும் இஸ்லாம் பல்வேறு படையெடுப்புக்களைச் சந்தித்து வந்துள்ளது. பல சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வாக இருப்பதால் இஸ்லாம் என்பது இயல்பாகவே மக்களை ஈர்க்கக்கூடிய ஒரு கொள்கையாக இருந்து வருகிறது. ஆதிக்க சக்திகள் இதன் வளர்ச்சி கண்டு அச்சம் கொள்கிறார்கள். இஸ்லாம் அல்லாத வேறு எந்தக் கொள்கையோ கோட்பாடோ இத்தகைய சவால்களை எதிர்கொண்டிருந்தால் அதன் சாயல்கூட உலகில் இல்லாது அழிக்கப்பட்டிருக்கும். ஆயினும், இஸ்லாம் இந்தளவு சவால்களுக்கும் ஈடு கொடுத்து நிலைத்து நிற்பதே அதன் தனிச்சிறப்பும் அற்புதமுமாகும் என்றால் மிகையாகாது.

முஸ்லிம் உலகு சந்தித்த உள்நாட்டுக் குழப்பங்களும் வெளிநாட்டுப் படையெடுப்புக்களும் முஸ்லிம்களின் கவனத்தைத் திசைதிருப்பியது. இவற்றில் நூறாண்டுகளைத் தாண்டியும் நீண்டு சென்ற சிலுவை யுத்தங்கள் பிரதானமானவையாகும். அப்போது சிலுவை வீரர்களால் முஸ்லிம் தேசங்கள் சிதைக்கப்பட்டன. முஸ்லிம் உலகின் முழுக் கவனமும் இந்த சவாலை எதிர்கொள்வதன் பால் திரும்பியிருந்தது. தொடர்ந்து முஸ்லிம்களின் தனிச் சிறப்புக்களும், கலைக்கூடங்களும் அழிக்கப்பட்டன.

இவ்வாறே இஸ்லாமிய உலகு சந்தித்த மிகப்பெரும் சோதனைகளில் ஒன்றான தாத்தாரிய படையெடுப்பின் போதும் முஸ்லிம்கள் பெருமளவு பாதிக்கப்பட்டனர். அவர்களது அறிவியல் செல்வங்கள் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான நூல் நிலையங்களிலிருந்த லட்சக் கணக்கான ஆய்வு நூல்கள் எரிக்கப்பட்டன. நைல் நதியில் முஸ்லிம்களின் ஆய்வு நூல்கள் பாலமாகப் போடப்பட்டதாகவும், நூல்கள் எழுதப்பட்ட மை கரைந்ததால் நைல் நதி நீர் நீண்ட நாட்களாகக் கரும் நிறத்தில் காட்சியளித்ததாகவும் கூறப்படுமளவுக்கு இந்த அழிவு இருந்தது. இதனால் ஆண்டாண்டு காலமாகப் பல்வேறுபட்ட அறிஞர்களின் கடின உழைப்பால் முஸ்லிம்கள் சேகரித்து வைத்திருந்த அறிவியல் பொக்கிஷங்கள் அழிக்கப்பட்டன.

### ● ஐரோப்பிய காலனித்துவ ஆக்கிரமிப்பு

பிரான்ஸ், பிரித்தானியா, இத்தாலி, ஹோலாந்து போன்ற ஏகாதியபத்திய நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு முஸ்லிம் நாடுகள் உள்ளாகின. ஆக்கிரமிப்பாளர்கள் அந்நாட்டு இயற்கை வளங்களை கையகப்படுத்தியதோடு நில்லாமல் தாம் ஆக்கிரமித்த நிலம், மக்கள் அவர்களது மதம், கலாசாரம் என்பவற்றைக் கடுமையாக ஆராய்ந்து அவற்றின் தனிச்சிறப்பம்சங்களை இனங்கண்டு அவற்றை சிதைத்தார்கள். பலம் எது என அறிந்து அதைத்தகர்த்தனர். பலவீனம் எது என்பதை இனம்

கண்டு அவற்றைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர். இவ்வகையில் முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் ஒழுக்கவீழ்ச்சியை ஏற்படுத்தியதுடன் அவர்களது அறிவியல் பொக்கிஷங்களைத் திருடிச் சென்றனர்.

**இறையச்சமும் அறிவியலும்**

அன்று அறிவியலின் உச்சநிலையை அடைந்து உலகெங்கும் அறிவொளி பரவக் காரணமானார்கள் முஸ்லிம்கள். இறையச்சம் என்ற பொறுப்புணர்வோடு அறிவியலாளர்கள் செயல்பட்டபோது ஆக்கபூர்வமான பயன்பாடுகளை அறிவியல் தந்தது. இறுதியில் முஸ்லிம்கள் படிப்படியாக இத்துறையில் செல்வாக்கை இழந்தனர். அதனைத் தொடர்ந்து ஐரோப்பியர் இத்துறையில் எழுச்சி பெற்றனர். தொடர்ந்து காலனி ஆதிக்க சக்திகளின் கைகளில் சிக்கிய அறிவியல் இன்று மனித குல அழிவுக்கும் அச்சுறுத்தலுக்கும் செல்வக்குவிப்புக்கும் நலிந்த நாடுகளைப் போர்முனையில் தொடர்ந்து நிறுத்துவதற்கும் பயன்படும் அதிமுக்கிய கருவியாக மாறியுள்ளதை நாம் அறிவோம். இக்கருவியை மீண்டும் அழிவிலிருந்து மீட்டெடுக்க ஒரே வழி நம்மைப் படைத்த இறைவன்பால் மனிதகுலம் திரும்புவதே!

# கருணை காட்டுதல் என்ற சமூகக் கடமை

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**“பூமியில் உள்ளோர் மீது கருணை காட்டுங்கள், வானத்தில் உள்ளவன் உங்கள் மீது கருணை காட்டுவான்.” மேலும் கூறினார்கள்: “மனிதர்களுக்கு கருணை காட்டாதவர் மீது அல்லாஹ் கருணை காட்டமாட்டான்.”** (மு.ஃஜமுத் தப்ரானி)

இறைநம்பிக்கையாளர்கள் இதயத்தில் கருணை விசாலமாக இருக்க வேண்டும். அதை தனது குடும்பம், மனைவி, மக்கள், உறவினர்கள் என்ற வட்டத்துக்குள் சுருக்கிக் கொள்ளாமல் சமூகத்தின் அனைத்து மனிதர்களுக்கும் கருணையை விசாலப்படுத்த வேண்டும். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் அனைத்து மக்களிடமும் கருணையுடன் நடந்து கொள்வதை இறைநம்பிக்கையின் நிபந்தனைகளில் ஒன்றாகக் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ மூஸப் அல் அஷ்அரி(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

**“நீங்கள் ஒருவருக்கொருவர் கருணையுடன் நடந்து கொள்ளாதவரை ஈமான் கொண்டவர்களாக மாட்டீர்கள்” என நபி (ஸல்) அவர்கள் கூறியதும், தோழர்கள், “அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் அனைவரும் கருணையோடுதான் நடந்து கொள்கிறோம்” என்றார்கள். நபி (ஸல்) அவர்கள் “கருணை என்பது நீங்கள் உங்கள் தோழரிடம் மட்டும் கருணையுடன் நடந்து கொள்வதல்ல. எனினும் அது மக்களிடமும் கருணை காட்டுவதாகும். எல்லோருக்கும் பொதுவான கருணையாகும்” என்று கூறினார்கள். (மு.ஃஜமுத் தப்ரானி)**

## பெண்ணே, இறைவன் உனக்கு வழங்கிய பாதுகாப்புகள்





# நீ பிறப்பதற்கான உரிமை!
– சிசுக்கொலைக்குத் தடை

# படிப்பதற்கு உரிமை, # பொருள் சேர்க்கும் உரிமை,



# மணமகனை தேர்ந்தெடுக்கும் உரிமை
# வரதட்சணைக்கு நேர்மாற்றமான மஹர் (வதுதட்சணை) பெறும் உரிமை,
# விவாக ரத்து உரிமை





# பாலியல் கொடுமைகளில் இருந்து பாதுகாக்க பர்தா
# பெற்றோர் , கணவன், சகோதரன், மகன் இவர்களின் சொத்துகளில் இருந்து வாரிசுரிமை
# முதிய வயதில் பிள்ளைகள் பராமரிப்பு
# தாய்மை என்ற உயர் அந்தஸ்து



# ஆண்டுக்கு ஒருமுறை வருவதல்ல..
என்றும் இங்கு மகளிர் தினமே!

● மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள் (எனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள் தீயதை விட்டும் விலக்குகிறீர்கள், இன்னும் இறைவன் மேல் நம்பிக்கை கொள்கிறீர்கள் (திருக்குர்ஆன் 3:110)

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஒசூர்:9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி:9842627171 கோவை: 9600800050 திருப்பூர்:9150068919 குன்னூர்:9843622246 ஊட்டி:9543963412 ஈரோடு:7373947869, 9942958888 உடுமலை:9865051914 சேலம்:9994091364 திருச்சி:9865446344, 9442709087 மதுரை:9789341714 கும்பகோணம்:9597285160 விழுப்புரம்:9790290002 திருநெல்வேலி:9786230030 தென்காசி :9443695979 வேலூர்:9944656942 மயிலாடுதுறை:9942941190 திருவண்ணாமலை:9994564650, 9944905212 தூத்துக்குடி:8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்:9043758656 கே.ஜி.எ.ஃ.ப்:9845217262

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2018-2020
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308
Date of Publication: 25th of every month

**(PRINTED MATTER)**

To

.................................................................

.................................................................

.................................................................

.................................................................

## அனுதினமும் நிகழும் ஆவி அற்புதம்!

அல்லாஹ், உயிர்களை அவை மரணிக்கும் போதும், மரணிக்காதவற்றை அவற்றின் உறக்கத்திலும் கைப்பற்றி, பின்பு எதன் மீது மரணத்தை விதித்துவிட்டானோ அதை(த் தன்னிடத்தில்) நிறுத்திக் கொள்கிறான்; மீதியுள்ளவற்றை ஒரு குறிப்பிட்ட தவணை வரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான் - சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு, நிச்சயமாக அதில் அத்தாட்சிகள் இருக்கின்றன.

(திருக்குர்ஆன் 39:42)

**உறங்கும் முன் பிரார்த்தனை :**
இறைவா!
உன் பெயரைக்
கொண்டே
மரணிக்கிறேன்,
உயிர் பெறுகிறேன்.




**உறக்கத்தில் இருந்து விழித்ததும் பிரார்த்தனை :**
“எங்களை மரணிக்கச் செய்தபின் உயிர்ப்பித்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். மேலும் அவனிடமே நமது திரும்பிச் செல்லுதல் உள்ளது.”

அல்லாஹ் என்றால் ‘வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்’ என்பது பொருள்